தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தக்காளி விலை மார்ச் இரண்டாம் வாரம் முதல் உயரும்

உலக அளவில் அதிகமாக பயிரிடப்படும் காய்கறிகளில் தக்காளி முதன்மை வகிக்கிறது. தக்காளியில் அதிக அளவில் வைட்டமின்கள், தாதுக்கள், நார்சத்துக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன. அதிக அளவில் வைட்டமின் ஏ மற்றும் சி, தாதுக்களான இரும்பு, பாஸ்பரஸ், லைக்கேபீன் மற்றும் பீட்டா கரோட்டீன் ஆகியன உள்ளன.

இந்தியாவில், 35 விழுக்காடு உற்பத்தியுடன் ஆந்திர மாநிலம் முதன்மையாக திகழ்கிறது. இதனை அடுத்து 10.44 விழுக்காடு உற்பத்தியுடன் கர்நாடகா மாநிலம் உள்ளது. 3.45 விழுக்காடு உற்பத்தியுடன் தமிழ்நாடு ஒன்பதாம் இடம் வகிக்கிறது. உற்பத்தித் திறனில் 34.3 டன் / எக்டர் மூலம் கர்நாடகா மாநிலம் முதன்மையாகவும் 21.4 டன் / எக்டர் மூலம் தமிழகம் நான்காவது இடத்தில், குஜராத் (25.2 டன் / எக்டர்) மற்றும் பீகார் (22.6 டன் / எக்டர்) மாநிலத்திற்கு அடுத்து உள்ளது.

இந்தியாவில் தக்காளிப் பயிரானது குளிர்கால மற்றும் கோடைக்காலப் பயிராக பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக ஆடிப்பட்டம், கார்த்திகைப்பட்டம் மற்றும் தைப்பட்டங்களில் பரவலாக பயிரிடப்படுகிறது. தை மற்றும் மாசி அறுவடை சமயம் ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களின் அறுவடையும் நடக்கிறது. அதனால் மைசூர் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் மொத்த சந்தைகளில் வரத்து அதிகரித்து பண்ணை விலை குறைகிறது.

எதிர்வரும் காலத்தில் தக்காளியின் விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும்

வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விவரங்களை ஆராய்ந்தது.

கோயம்புத்தூர் சந்தையில் தற்போது அதிக அளவில் வரத்து உள்ளது. மேலும் அறுவடை முற்றிலும் முடியாத நிலையில் வரும் காலங்களில் அதிக வரத்து எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மைசூர் மற்றும் பெங்களூரில் இருந்து வரத்து உள்ளது. தற்போது தக்காளி கிலோ ரூபாய் 4 / என்ற பண்ணை விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் தக்காளி வரத்து அதிகமாக உள்ளது. இங்கு தற்போது தக்காளி கிலோ ரூபாய் 2 / என்ற பண்ணை விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தலைவாசல் மொத்த சந்தையில் சுற்றுப்புற பகுதிகளான ஆத்தூர், கடலூர் மற்றும் பண்ருட்டி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்தும் வரத்து உள்ளது. தற்போது தக்காளி கிலோ ரூபாய் 4-5 என்ற பண்ணை விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒசூர் சந்தையிலும் பெங்களூர் மற்றும் தர்மபுரி மாவட்ட பகுதிகளில் இருந்து வரத்து அதிகரித்துக் காணப்படுகிறது. தற்போது தக்காளி கிலோ ரூபாய் 3 முதல் 4 என்ற பண்ணை விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வருடங்களில் நிலவிய விலையை ஆய்வு செய்து, வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியதில் தற்போதைய விலையே மார்ச் இரண்டாம் வாரம் வரை நீடிக்கும் என்பது அறியப்பட்டு உள்ளது. மார்ச் இரண்டாம் வாரத்திற்கு பிறகு விலை உயர வாய்ப்புகள் உள்ளன.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u> :-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374 / 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்